**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.66/2025 - PW-14**

| | |
|---|---|
| Name | திரு.ரமேஷ் |
| Husband/Father Name | கணபதி |
| Village /Area | காட்டுகண்டிகை |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 56 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 09.03.2026.

**(எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர்**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 19.01.2025 அன்று மாலை என்னுடைய மைத்துனர் சுரேஷ் என்பவருக்கு போன் செய்து நான் ஆடு விற்ற பணத்தை வாங்கி வர வேண்டும் என கூறி அவரை அழைத்தேன். நான் அழைத்ததன் பேரில் மாலை 3 மணிக்கு என் மைத்துனர் சுரேஷ் வந்தார். நானும் மைத்துனர் சுரேஷும் அகவலம்மோட்டூர் அட்டை கம்பனி அருகே சென்ற போது போலீசார் ஒருவரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தனர். நாங்கள் அவர் அருகில் சென்று என்ன என்று விசாரித்த போது திருமால்பூரில் பெட்ரோல் ஊற்றி எரித்த வழக்கில் சம்மந்தப்பட்ட நபர் சதீஷ்குமார் என்று கூறினார். அப்போது சதீஷ்குமார் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது மைத்துனர் சுரேஷும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த வாக்குமூலத்தை இருசக்கர வாகனத்தின் மீது மடிக்கணினியில் பதிவு செய்தனர். மேலும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த சதீஷ்குமார் என்பவரிடமிருந்து இருசக்கர வாகனத்தை போலீசார் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது மைத்துனர் சுரேஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

19.01.2025 தேதி எனக்கு நியாபகம் உள்ளது. எனது மைத்துனரின் சொந்த ஊர் திருமால்பூர் அருந்ததிபாளையம். அவர் அருந்ததிபாளையத்தில் குடியிருந்து வருகிறார். காட்டுகண்டிகையில் ஒரே தெரு தான் உள்ளது அதில் தான் நான் வசித்து வருகிறேன்.

காட்டுகண்டிகையிலிருந்து நெமிலி வந்து காவல் நிலையம் தாண்டி தான் நாங்கள் சென்றோம் என்று சொன்னால் சரிதான். காவல் நிலையம் சென்ற பிறகு தான் நாங்கள் அங்கு சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையம் இருந்த வழியில் நாங்கள் சென்றோம்.

நெமிலியிலிருந்து அகவலம் வழியாக சென்று அகவலம்மோட்டூரிலுள்ள அட்டை கம்பனிக்கு செல்ல வேண்டும். நெமிலி காட்டுகண்டிகையிலிருந்து அட்டை கம்பனி சுமார் 7கி.மீ தொலைவில் இருந்தது.

நாங்கள் பணம் வாங்குவதற்கு அகவலம்மோட்டூர்க்கு தான் சென்றோம். அட்டை கம்பனிக்கும் அகவலம்மோட்டூர்க்கு இடைப்பட்ட தொலைவு எவ்வளவு என்று எனக்கு தெரியாது.

அகவலம்மோட்டூரை தாண்டி தான் அட்டை கம்பனி உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் ஆட்டை அகவலம்மோட்டூரை சார்ந்த வியாபாரி ஒருவர் தான் வாங்கி சென்றார். அவர் பெயர் எனக்கு தெரியாது.

தனபால் என்ற புரோக்கர் கூறி தான் அகவலம்மோட்டூரிலுள்ள வியாபாரிக்கு ரூ.5000/– க்கு ஆட்டை விற்றேன். பொங்கலுக்கு 4 நாட்கள் முன் ஆட்டை விற்றேன்.

புரோக்கர் மூலமாக நான் எனது ஆட்டை வியாபாரியிடம் விற்றேன். நாங்கள் மேற்படி வியாபாரியிடம் பணம் வாங்குவதற்காக தான் சென்றோம் வேறு வேலைக்காக செல்லவில்லை.

நாங்கள் மேற்படி வியாபாரியை பார்ப்பதற்காக தான் சென்றோம். புரோக்கர் தனபால் அங்கு வராததால் பிறகு பனப்பாக்கம் செல்லலாம் என்று நாங்கள் சென்றோம்.

அகலவம்மோட்டூரிலிருந்து பனப்பாக்கம் மேற்கே உள்ளது. அகவலம்மோட்டூர்க்கும் பனப்பாக்கத்துக்கும் இடைப்பட்ட தொலைவு 3கி.மீ. அகவலம்மோட்டூரிலிருந்து கிழக்கு பக்கம் திரும்பி டாடா மோட்டார்ஸ் வழியாக சென்றால் தான் பனப்பாக்கம் வரும் என்று சொன்னால் சரிதான்.

அகவலம்மோட்டூர் ரோடானது உளியநல்லூர் கூட்டு சந்திப்பில் சென்று சேர்கிறது. வடக்கு பக்கம் உளியநல்லூர் ரோடு தெற்கு பக்கம் பனப்பாக்கம் ரோடு உள்ளது.

போலீஸ் விசாரணையில் நானும் சுரேஷும் ஆடு விற்ற பணத்தை புரோக்கர் தனபால் மூலமாக பெறுவதற்காக தான் அகலவம்மோட்ர்க்கு சென்றோம் என்ற விவரத்தை கூறினோமா என்றால் கூறினோம். மேலும்

நாங்கள் சென்ற போது ஆட்டை வாங்கிய வியாபாரி அங்கு இல்லாததால் பனப்பாக்கம் சென்றோம் என்ற விவரத்தை கூறினோமா என்றால் கூறினோம்.

நாங்கள் செல்வதற்கு முன்பு அட்டை கம்பனி அருகே பொது மக்கள் 5, 6 பேரும் போலீசார் 5, 6 நபர்கள் இருந்தார்கள். அட்டை கம்பனியின் முன்புறம் தான் போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள்.

அட்டை கம்பனிக்கு முன்னால் என்ன இருந்தது என்று நான் பார்க்கவில்லை. நாங்கள் சுமார் 4 மணியிலிருந்து 5.15 மணி வரை அங்கு இருந்தோம்.

நாங்கள் செல்வதற்கு முன்பு போலீசார் யாரை விசாரித்து கொண்டிருந்தார்கள் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. Scooter மீது வைத்து தான் போலீசார் தட்டச்சு செய்து கொண்டிருந்தார்கள். எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் 2வது வகுப்பு வரை படித்துள்ளேன்.

தட்டச்சு செய்யும்போது அதில் என்ன விவரம் தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. சுமார் எத்தனை பக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது.

தட்டச்சு செய்த போலீசார் யார் என்று எனக்கு தெரியாது. கும்பலாக 5 போலீசார்கள் இருந்தார்கள். அட்டை கம்பனியின் வாசல் எந்த பக்கம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

போலீசார் எங்கு சென்று தட்டச்சு செய்ததை print எடுத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் இட்ட 2 ஆவணங்களையும் யார் எடுத்து சென்று print எடுத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. 2வது ஆவணம் Scooter–ஐ கைப்பற்றியதற்காக கையொப்பம் வாங்கினார்கள்.

நான் கையொப்பம் இட்ட தாளில் இருந்த விவரத்தை போலீசார் எனக்கு படித்து காண்பித்தார்கள். அவைகள் எத்தனை பக்கங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. கடைசி பக்கத்தில் நான் கையொப்பம் இட்டேன்.

மேற்படி வண்டி யாருக்கு சொந்தமானது யார் பெயரில் உள்ளது அதன் பதிவு எண் பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

நான் அகவலம்மோட்டூர்க்கு ஆடு விற்ற பணத்தை வாங்க சென்றதாக கூறிய விவரம் தவறு என்றும் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

அட்டை கம்பனியில் கேட் அருகே camera பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அட்டை கம்பனிலியிருந்து 20 அடி தூரத்தில் தான் போலீசார் மேற்படி விசாரணை நடத்தி கொண்டிருந்தார்கள்.

அட்டை கம்பனிக்கும் ரோட்டிற்கும் இடைப்பட்ட தொலைவு எவ்வளவு என்றால் அதை பற்றிய விவரம் தெரியாது. ரோட்டிலிருந்து

போலீசார் விசாரண நடத்திய இடம் எவ்வளவு தொலைவு என்றால் ரோட்டில் தான் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள்.

போலீசார் எங்களை விசாரணை நடந்த இடத்தில் இருக்க சொல்லவில்லை. விசாரணை முடிந்து கையொப்பம் கேட்ட போது நாங்கள் கையொப்பம் இட்டோம். அங்கிருந்த பொது மக்களிடமும் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஆமாம்.

நாங்கள் அட்டை கம்பனிக்கு போக வேண்டிய அவசியம் இல்லை என்றும் அதனால் தான் அட்டை கம்பனி பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை என்றும் காவல் நிலையத்தில கையொப்பம் இட்டுவிட்டு போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நானும் கோகுலும் விஜயகணபதியும் சுரேஷும் ஒரே கட்சியை சேர்நதவர்கள் என்று சொன்னால் சரியல்ல சுரேஷும் கோகுலும் எனது உறவினர்கள்.

நாங்கள் அனைவரும் ஒரே சமுதாயத்தை என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆடு விற்கவில்லை என்றும் நான் பணம் வாங்க செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.09 19:20:49 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.